**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.332/2015**

1) S.தேவராஜ்

2) S.சிவராஜ்

3) S.அன்பழகன் ... மனுதாரர்கள் / உத்தேச பிரதிவாதிகள்

/ எதிர் /

சேகர் ... எதிர்மனுதாரர்/வாதி

1) விஸ்வநாதன்
2) லோகநாதன்
3) சிவசுப்பிரமணியன்
4) முத்துச்சாமி
5) நடராஜ் ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 23.01.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ உத்தேச பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.முரளி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## ஆணையுரை

மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக கட்சிசேர்க்க உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனு சங்கதியின் சுருக்கம்</u>** :

இம்மனுவின் மனுதாரர்கள் சகோதரர்கள் ஆவார்கள். மேற்கண்ட அசல் வழக்கின் எதிர்மனுதாரர்/வாதியின் தந்தை மனுதாரர்களின் தகப்பனார் சண்முகதேவர் அவர்களின் சகோதரர் ஆவார். அசல் வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ள கோவில் மற்றும் நிலத்தில் மனுதாரர்கள்/ உத்தேச பிரதிவாதிகளுக்கும் உரிமை இருப்பதால் அவர்களை எதிர்மனுதாரர்/வாதி இவ்வழக்கில் வாதிகளாக கட்சிசேர்க்காமல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்/வாதி ஆகியோர் சேர்ந்து சுழற்றி முறையில் பராமரித்து வருகிறார்கள். கோவிலுக்கு மீது யாருக்கும் தனிப்பட்ட உரிமை கிடையாது. மேலும், கோவில் தவிர இதர சொத்துக்களையும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதார்/வாதி பாட்டனார் சுப்பையதேவர் காலமானபின்னிட்டு ஒன்றாக பராமரித்து வருகிறார்கள். மேலும், மேற்படி மனுதாரர்கள்/ உத்தேச பிரதிவாதிகள் இல்லாமல் இவ்வழக்கிற்கு தீர்வு காண இயலாததால், மேற்படியாளர்கள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் ஆவார்கள். எனவே, மனுதாரர்களை இவ்வழக்கில் கட்சிசேர்த்து உத்தரவிடகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

தாவா கோவிலுக்கும் மனுதாரருக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. இந்நிலையில் ஒரு முறை வைத்து அதன்படி கோவில் வழிபாட்டினை நடத்தி வருவது போலவும், சுப்பைய தேவர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தை தொடர்ந்து நடத்தி வருவது போலவும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறாகும். மேலும், வாதி சேகர் அவர்கள் இவ்வழக்கில் திருத்தல் பிராது ஒன்று தாக்கல் செய்தார். அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேற்படி கூடுதல்

எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்/வாதி சேகரின் சகோதரர் ராஜு மற்றும் அகமுடைய சமூக முக்குந்தர் குலமக்கள் ஆகியோர் இவ்வழக்கில் அவசியதரப்பினர் என்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் குறிப்பிட்டிருந்த அடுத்த வாய்தாவிலேயே இம்மனுவை தாக்கல் செய்ததிலிருந்து மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளும், வாதி/எதிர்மனுதாரரும் கூட்டுசேர்ந்தவர்கள் என்பது தெரியவருகிறது. மேலும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மனுதாரர்கள் திடீரென்று கட்சிசேர்க்க கூறுவது எதிர்மனுதாரர்/வாதியின் தூண்டுதலின் பேரில் தான். எனவே, இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை எதுவும் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

7) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவிலுக்குள் பிரதிவாதிகள் நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு வந்தநிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளின் தகப்பனாரும், எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள் என்றும், அதனால் மேற்படி கோவிலில் மனுதாரர்களுக்கும் உரிமைஇருப்பதால் அவர்களையும் இவ்வழக்கில் கட்சிசேர்த்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு தொடர்ந்து 7 வருடம் கழித்து அதுவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அதில் அவசியதரப்பினர் பற்றி குறிப்பிட்டபிறகு அடுத்த வாய்தாவில் மேற்படி மனுதாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், இதிலிருந்து மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளும், எதிர்மனுதாரர்/வாதியும் கூட்டாளிகள் என்பது தெரியவருகிறது என்றும், மேலும் எதிர்மனுதாரர்/வாதியின் தூண்டுதல் பேரிலே மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இவ்வழக்கிற்கு எதிருரை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

9) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை பரிசீலனை செய்கையில் வாதியின் தகப்பனார், இம்மனுவில் கண்ட மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் ஒரு காமாட்சிதேவர் ஆகியோர்கள் சகோதரர்கள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், அவர்களது தாத்தா சுப்பையா தேவருக்கும், அவரது மூன்று ஆண்வாரிசுகளிடையே ஏற்பட்ட பாக பத்திரப்படி மனுதாரர்களின் தகப்பனாரும், எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனாரும், ஒரு காமாட்சிதேவரும் வருடத்திற்கு ஒருவர் என்ற சுழற்சி முறையில் இவ்வழக்கில் கண்ட கோவிலை நிர்வகித்து பராமரித்து வரவேண்டும் என்றும், மேற்கண்டவாறு கோவிலை நிர்வகித்து வந்த நிலையில், அசல் வழக்கின் பிரதிவாதிகள் நிர்வாகத்துக்கு இடையூறு செய்ததால் மேற்கண்ட வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும், இம்மனுதாரர்களுக்கு வழக்கு கோவிலை நிர்வகிக்கும் உரிமை உள்ளது என்றும், எனினும் வழக்கு தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்பதால் அவர்களை வாதிகளாக சேர்க்கவில்லை என வழக்குரையில் கூறப்பட்டுள்ளது.

**10)** ஆகவே, வழக்கு கோவிலை நிர்வகிக்கும் உரிமை இம்மனுதாரர்களுக்கும் உள்ளது என வழக்குரையிலேயே எதிர்மனுதாரர்/வாதி ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது மனுதாரர்கள் தங்களுக்கு வழக்கு கோவிலில் உரிமை உள்ளது என்றும், ஆகவே, தங்களை தரப்பினர்களாக அசல் வழக்கில் சேர்க்க வேண்டும் என மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். ஆகவே, மேற்கண்டவாரான பரிசீலனையிலிருந்து, இம்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர் என்றும், அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் இவ்வழக்கில் கண்ட பிரச்சனைகளை முழுமையாக முடிவுசெய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11)** முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள்/உத்தேசபிரதிவாதிகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (27.01.2023) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

..... இல்லை .....

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------------------------------

**<u>வரைவு/அசல் ஆணையுரை</u>**

இ.ம.எண்.2/2022 இன் அ.வ.எண்.332/2015

நாள் : 27.01.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

-------------------------------------------------------